RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2437

OPEN ACCESS

# முல்லைவாணன் கவிதையில் தாய்மை பண்புகள்

ப. இளம்பரிதி [அ, *], அ. பாரதிராணி [அ]

[அ] தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக்கல்லூரி, (அழகப்பா பல்கலைக்கழகம்), காரைக்குடி - 630003, தமிழ்நாடு, இந்தியா.

# Motherhood Characteristics in Mullaivanan's Poetry

P. Ilamparithi [a, *], A. Bharathi Rani [a]

[a] Department of Tamil, Alagappa Government Arts College, (Alagappa University) Sivaganga-630003, Tamil Nadu, India

* Corresponding Author:
parithi978791@gmail.com

Received: 26-03-2024
Revised: 03-07-2024
Accepted: 08-07-2024
Published: 17-07-2024

Check for updates

**ABSTRACT**

According to Tamil culture morality takes a person to a higher level. If people undergo hardships in their lives and act on the path of virtue, their fame will be praised till the end of this world. A mother imparts such good morals to the child through songs and stories, and tell their babies they not only protect them but bring pleasures to many. A mother is the one and only woman in this world who can be admired by all. Although women reach many heights in life, it is motherhood that adds beauty to them. A woman is the primary participant in the family. She assumes the responsibility of maintaining the household. She is aware of many imbalances in her way of life and supports the elevation of life. The purpose of this article is to highlight the virtues of such a family and motherhood such as child rearing, morality, courage and love.

**Keywords:** Motherhood, Morality, Mullaivanan, Poetry

## முன்னுரை

இவ்வுலகில் அனைவரும் போற்றக் கூடிய பெண்மையில் ஒன்றாக விளங்குவது தாய் என்னும் சொல்லாகும். பெண்கள் வாழ்வில் பல உயர்ந்த நிலையினை அடைந்தாலும் அவளுக்கு அழகு சேர்ப்பது தாய்மையாகும். பெண் என்பவள் குடும்ப சூழலில் பங்குகொள்ள முதன்மையாக அமைகிறது. அவள் இல்லறத்தை பேணிக்காக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாள். தன்னுடைய வாழ்வியல் முறைகளில் பல ஏற்றத்தாழ்வுகளை அறிந்து வாழ்வின் உயர்விற்கு துணையாக இருக்கிறாள். இத்தகைய அனைனையின் நற்கருத்துக்களான குழந்தைவளர்ப்பு, ஒழுக்கம், துணிவு, அன்பு ஆகியவற்றை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குழந்தை வளர்ப்பு

இல்லற வாழ்வில் தாய் தன் குழந்தையை பத்து மாதங்களாக சுமந்து பெறுகிறாள். தன் உடல்நிலை மற்றும் மனநிலையில் துன்பங்கள் தோன்றினாலும் குழந்தைக்கு பசிக்கும் என்ற உணர்வை எண்ணி பசியைப் போக்குகிறாள். தன் குழந்தையின் மீது அன்பும், நட்பும் கொண்டு அரவணைத்து பாதுகாக்கிறாள் இத்தகைய தாயின் சிறப்பை,

“குழந்தையின் பூதஉடலை மட்டும் பெற்றெடுப்பவளல்ல

தாய் அதன் புகழ் உடம்பையும் பெற்றெடுப்பவர் அவளே”1

என்று அப்துல் ரஹீம் அவர்கள் கூறியுள்ளார். இதனை முல்லை வாணன் அவர்கள்,

"தாய்மொழி என்னும் அமுதுட்டி, நம்மைத்

தாய் வளர்த்தால் நல்ல பாலூட்டி"

குழந்தையை தாய்மொழி கற்றுக்கொடுத்து, பால் என்கிற அமுதை உட்டி பேணிவளர்த்தாள் என்கிறார்.

## ஒழுக்கம்

தமிழர் வாழ்வில் ஒழுக்கம் உயர்ந்த நிலைக்கு மனிதனை கொண்டு செல்கிறது. பலர் வாழ்வில் பல துன்பங்களை கடந்து அறவழியில் நின்று செயல்பட்டால் இவ்வுலகம் அழியும் வரை உன் புகழ் போற்றப்படும். இத்தகைய ஒழுக்கம் பற்றிய நற்கருத்துகளை பாடல்கள் வழியாகவும், கதைகள் வழியாகவும் குழந்தைக்கு எடுத்துரைத்து, அவை தன்னைக் காப்பது மட்டுமின்றி பலருக்கும் இன்பத்தை தரவல்லது. இத்தகைய ஒழுக்கத்தின் சிறப்பை திருவள்ளுவர்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்"2

ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் சிறந்ததாகும். இதனை முல்லைவாணன் அவர்கள்

"ஒழுக்கத்தில் உயர்வோம்

உண்மையில் நிறைவோம்"

நாம் ஒழுக்கமாய் நடந்தால் வாழ்வில் உயர்ந்து விளங்குவோம் என கூறினார்.

## அன்பு

மக்களின் இனிய வாழ்வுக்கு சிறந்ததாக அமைவது அன்பு. உலகத்தில் பல இனங்களும், மதங்களும், வாழ்கின்றனர். அவற்றை எல்லாம் ஒன்றிணைத்து புதிய உறவை வளர்க்க ஆயுதமாய் இருப்பது அன்பாகும். பிறர் துன்ப நிலையில் வாடும் பொழுது அதனை அறிந்து துன்பத்தை நீக்கி அன்பு செலுத்தவேண்டும். அன்பின் வழியது உயிர்நிலை" என்றார் வள்ளுவர். அன்பின் வழியாக இறைவனை காணலாம் இத்தகைய அன்பின் சிறப்பை விவேகானந்தர், "மற்றவர்களிடம் நீ அன்பு செலுத்துகிறாய் என்றால் அதை நீ எப்படிக்காட்ட வேண்டும்? அவர்களைப் புகழ்வதனாலன்று, அவர்களுக்கு தொண்டு செய்வதனால்"3 என்கிறார்.

இதனை முல்லைவாணன் அவர்கள்,

"அன்பே என்றும் வழித்துணையாம்

அகல்நிலம் தனையே இணைப்பதுவாம்"

அன்பு என்ற ஒன்று வாழ்விற்கு துணையாக இருப்பது மட்டுமின்றி அனைத்து நிலப்பகுதி மக்களை இணைக்கும் பாலமாகும். எனவே தன் குழந்தைக்கு அன்பை போதித்தல் வேண்டும் என்கிறார்.

## துணிவு (வீரம்)

ஒருவர் தன்னை பிறரிடம் இருந்து பாதுகாத்து கொள்ள முதன்மையானது துணிவும் வீரமும் ஆகும். பெண்கள் மென்மையான உணர்வை வாழ்வியல் சூழலில் பயன்படுத்தினாலும் தன் குழந்தை வீரத்துடன் பேசுவதையும் அவன் பிறரிடம் நடக்கும் நடத்தைகளின் வாயிலாக பெருமையடைவாள். தன் மகன் வீரத்தை பலர் போற்ற கேட்டு மனதில் இன்பம் அடைவாள். வீரம்

தன் பகைவரையும் வெற்றி பெற உதவும் இத்தகைய வீரத்தை புறபொருட்வெண்பா மாலையில் பெண்களுக்கும் வீரம் உண்டு என்பதை,

“அடல்வேல் ஆடவர்க் கண்றியும் அவ்வில்

மடவரல் மகளிர்க்கும் மற்மிகுத் தன்று”4

இக்கருத்தையும் கொண்டு முல்லைவாணன் அவர்கள்,

“துணிவுடைமை கொள்ள நீங்கும் துயர்மக்கள்

கொண்டாலே உன் வாழ்வு சிறக்கும் உயர்”

மனிதனுக்கு துணிவு என்று ஒன்று இருந்தால் துன்பங்கள் நீங்கி வாழ்வு சிறக்கும் என்கிறார்.

## கல்விநிலை

மக்கள் தன் வாழ்வில் முன்னேற மிகவும் இன்றியமையாதது கல்வி, கல்வி வாயிலாக வாழ்வு உயர்வது மட்டுமின்றி அறியாமை என்ற நோயும் அழிகின்றது. அனைத்து உயிர்கடம் பகை மறந்து, அன்புடனும், அறிவுடன் செயல்படுகின்றன. தன்னுடைய சுற்றதாரும் பெருமை கொள்கின்றன, மேலும் புதுபுது வாழ்வியல் கூறுகளை வகுத்து மிகச் சிறந்த வாழ்வில் சிறந்து விளங்குகின்றனர்.

“படித்த மாந்தர் நிறைந்த நாட்டில்

பார்க்கும் யாவும் பொதுஉடைமை”5

கல்வி பயின்றால் அனைவரையும் சமமாக எண்ணும் மனப்பான்மை உண்டாகும். இதனை முல்லைவாணன் அவர்கள்,

“கற்க கற்க கல்வி

பிழையின்றி கற்க”

நாம் கல்வியை பிழையின்றி கற்று வாழ்வில் உயரலாம் எனக் கூறுகிறார்.

## முடிவுரை

மக்கள் பலர், இருப்பினும் ஆணும், பெண்ணும் சமமாக கருதவேண்டும். தன்னை பெற்றெடுத்தவளும் ஓர் பெண்ணே என்ற எண்ணத்தை கொண்டு மதித்தல் வேண்டும். தாய்மை குணங்கள் பல இருப்பினும் அன்பும், அறமும் கற்றுக்கொடுத்தல் வாழ்விற்கு உயர்வு அளிக்கும், தன் மகன் ஊர் போற்ற பெரும் புகழ் பெற அன்னையே முதன்மையானவள். எனவே அனைத்து நற்பண்புகளை கற்றுக்கொடுத்து வாழ்விற் உயர வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## References

இராமசந்திரன், வி.கே. (1967) வாழ்வுநெறி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை

கதிரேசன். சுப. (2016) கண்ணதாசன் பாடல்களில் அருமையான சமுதாய சிந்தனைகள், மணிமேகலை பிரசுரம், சென்னை

சாமி. சிதம்பனார் (1959) திருக்குறள் பொருள் விளக்கம், ஸ்பார்பிரசரம், சென்னை

தனபாலன். கோ. (2007) கட்முடுரைச் செல்வம் கவிஞர் கோ.தனபாலன், புதுச்சேரி

**தாயம்மாள் அறவாணன், (1959) பெண்கள் இன்று,நேற்று, அன்று பச்சைப்பசேல், புதுச்சேரி**

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License